1st August 1966] *[திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்]*

வகையைச் சேர்ந்ததுதான். ஒரு வகை குதிரை இருக்கிறது என்றால் அது காட்டுக் குதிரை அல்ல. நம் குதிரைகளை காட்டில் வைத்து அதை பிடிக்காததால் காட்டுக் குதிரை என்கிறார்கள். அவை காட்டுக் குதிரைகள் அல்ல. நிறைய இல்லை. எங்கள் பகுதியில் கூட ஸ்டாலியன் வாங்கி வந்து விட்டு வைத்திருக்கிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகமாக இருக்கக் கூடிய இந்தக் காலத்தில் ஆறாயிரம் ஏக்கரை விலங்குகள் வளர்ப்பதற்காக விடுவது சரியா? இல்லை என்றால் அதை அழித்து விட்டு அந்தப் பூமியை விவசாயத்திற்கு விட்டுக் கொடுத்து உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்ய வன் அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அங்கு "ஸ்வாம்ப்" மாதிரி இருக்கிறது. சகதி என்று சொல்வார்கள். அங்கு உப்பு பாக்டரிக்குக் கூட ஆயிரக்கணக்கான ஏக்கர் கேட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. மற்றவையெல்லாம் "ஸ்வாம்ப்".

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த வன விலங்குகள் பறவைகள் உய்விடம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமையும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஈர்ப்பது பயணிகள் கண்டு களிக்கவா அல்லது வேட்டையாடி மகிழவா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : உய்விடம் என்று சொன்னால் வேட்டை ஆடக் கூடாது.

பறவைகளை வேட்டையாடத் தடை

***15 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அண்மையில் திருச்சி மாவட்டத்தில் உள்ள, துவாக்குடியை அடுத்த தேவராயன் குளத்தில் பறவைகளை சுடக்கூடாது என்று தமிழக அரசு உத்திரவு பிறப்பித்தது உண்மையா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம், ஐயா.

திரு. பி. முருகையன் : அங்கு என்னென்ன வகையான தேசியப் பறவைகள் காணப்படுகின்றன? அங்கு இயற்கையாகவே அவை வளர்ந்து கொண்டிருக்கின்றனவா அல்லது செயற்கை முறையில் அப்பறவைகள் வளர்க்கப்படுகின்றனவா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அங்குள்ள இனங்கள், கூஸ் (வாத்து), வர்ண நாரை, பெரிய தாரா இந்த மூன்றும்தான் வின்டர் ஸீஸனில் வருகின்றன, அவை நவம்பர், டிசம்பர், ஜனவரி பெப்ரவரி மாதம் வரை இருக்கும்.

[1st August 1966

திரு. து. ப. அழகமுத்து : அங்கு பிரயாணிகள் வந்து பார்ப்ப தற்கு வசதியாக இருக்க அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : பேர்ட்ஸ் சாங்க்சுவரி நம் ஸ்டேட்டில் 16 இருக்கின்றன. இதையும் சேர்த்து 16, என்று கணக்கில் வைத்திருக்கிரேம். சமீபத்தில் கூட பார்த்திருக்கலாம். வேடந்தாங்கலில் பல சௌகரியங்கள் செய்து கொடுத்திருக்கிரேம். நான்காவது ப்ளானில் கொஞ்சம் கொஞ்சமாக நிதி ஒதுக்கி பல வேலைகள் செய்யப்படுகின்றன.

Multi-purpose Fisheries Project

*16 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether the Government have proposed to establish a multi-purpose Fisheries Project at Tuticorin ;

(*b*) whether any aid from UNICEF has been sought for in respect of the same; and

(*c*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : தூத்துக்குடியில் இல்லாவிட்டாலும் நம் மாநிலத்தில் வேறு எங்கேயாவது இதுபோன்ற பலநோக்கு மீனளத் திட்டம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுள்ளதா ?

(பதில் இல்லை.)

இயந்திரப் படகுகள்

*17 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான சாமான்கள் கிடைப்பதில் சிரமம் இருக்கிறதா ?

(இ) இயந்திரப் படகுகளுக்குத் தேவையான உள்நாட்டு தயாரிப்பு சாமான்கள் வெளியிலிருந்து இறக்குமதி செய்யும் சாமான்களைவிட விலை ஏற்றம் உள்ளதாகவும், வலு குறைந்ததாக வும் இருக்கின்றது என்பது உண்மையா ?

(உ) அப்படியானல் அத்தகைய சாமான்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் என்ஜின்கள் தேவைப்படும் அளவுக்குக் கிடைப்பதில்லை. மீன் பிடி விசைப்படகுகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் செப்பு, பித்தளை உலோகங்களும் வேண்டிய அளவு க்கு உள்நாட்டில் கிடைப்பதில்லை.